தேதி - 21.07.2025

**S.C.No**. 262/2022

**P.W**.1 – திரு. தங்கராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு **A**1, **A**3, **A**4, **A**6, **A**7, **A**8, **A**10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை எத்தனை முறை விசாரித்தார் என்று கேட்டால் ஒருமுறை விசாரித்தார். 4ம் எதிரி நெல்சன் எனக்கு நெருங்கிய உறவினர் என்று சொன்னால் அவர் என் மனைவிக்கு உறவினர். (நெல்சன் தன் மாமனாரின் பேரன் என சாட்சி கூறுகிறார்) எனது திருமணத்திற்கு நெல்சன் வந்தாரா என்று கேட்டால் வரவில்லை. இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பே நெல்சன் என்பவரை எனக்கு தெரியும். எனது புகாரிலும், குவிமுச 161(3) ன் கீழான காவல்துறை விசாரணையிலும் நெல்சன் Yamaha FX என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், 3ம் எதிரி புல்லட் மணி உட்கார்ந்து வந்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. புகாரில் 4ம் எதிரி நெல்சன் என்பவரது பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் 2ம் எதிரி மச்சபாலா Suzuki Swish வாகனத்தை ஓட்டி வந்ததாகவும், 1ம் எதிரி அவரது பின்னால் அமர்ந்து வந்ததாகவும் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லவில்லை. புகாரில் இருசக்கர வாகனத்தின் மாடல் மற்றும் பதிவு எண் பற்றி சொல்லவில்லை. புகாரில் யார் யார் எந்த ஆயுதத்தை வைத்து யாரை குத்தினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியாது. எதிரிகள் சுருள் கத்தி பயன்படுத்தியதாக காவல்துறை விசாரணையில் சொன்னேனா என்று கேட்டால் சொல்லவில்லை. என் அப்பா இறந்தபோது அனுப்பானடி ஹவுசிங்போர்டில் குடியிருந்தேன். எனது அம்மாவும், அப்பாவும் அப்போது வாழைத்தோப்பில் குடியிருந்தார்கள். பட்டியல் சாட்சி 8 மகாலெட்சுமி என் தகப்பனாரின் 2வது மனைவி என்று சொன்னால் சரிதான்.

பட்டியல் சாட்சி 13 அலெக்ஸ் எனது சின்னம்மா மகன் என்று சொன்னால் அது சரிதான். என் அப்பா இறந்து கிடந்த இடத்திற்கு அருகே புங்கமரம், பூவரசமரம்

வரிசையாக வளர்ந்திருந்தது என்று சொன்னால் அது சரிதான். அந்த கார்பரேசன் காம்பளக்ஸ் வாசலில் 5 அடி அகலத்திற்கு தூண்கள் இருந்தன என்று சொன்னால் அது சரிதான். அந்த கார்பரேசன் காம்ப்ளக்ஸ் வாசலின் படிகட்டு வடக்கே தேவர் சிலை அருகே இருந்து ஆரம்பிக்கிறது என்று சொன்னால் அது சரிதான். நான் குடியிருந்த வீட்டிற்கும் என் தகப்பனார் குடியிருந்த வீட்டிற்கும் இருசக்கர வாகனத்தில் செல்ல சுமார் 10 நிமிடம் ஆகும். எனது வீட்டிலிருந்து எனது தகப்பனார் இறந்துகிடந்த இடத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் செல்லலாம். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய சமயத்தில் என்னிடம் மொபைல் போன் இருந்தது. அந்த நம்பரை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 5 வது எதிரி சபாரத்தினத்தின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக எனது புகாரிலும், காவல்துறை விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. தனபால் கடையிலிருந்து பார்த்தால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தெரியாது என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் இறந்ததாக சொல்லப்படும் தேதியில் மாலை 6 மணியளவில் மதுரை தெற்குவாசல் காவல்நிலையத்திற்கு சென்று நடந்த விபரத்தை சொன்னேன் என்று சொன்னால் அது சரிதான். அப்போது அதை போலீசார்கள் எழுதிக்கொண்டார்கள் என்று சொன்னால் நான் தான் எழுதினேன். போலீசார் சொல்ல சொல்ல நான் எழுதினேனா என்றால் ஆமாம். அந்த புகார் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 என்று சொன்னால் சரிதான். அந்த புகாரில் கூட வந்த என்னுடைய தாயாரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்று சொன்னால் அது சரிதான். யார் யார் எந்த ஆயுதத்தால் என் அப்பாவை வெட்டினார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. புகாரில் யார் யார் எங்கு வெட்டினார்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் நான் சொல்லவில்லை. என் தகப்பனார் இறந்துபோனதாக கூறப்படும் தகவல் எனக்கு கிடைத்தபோது மதியம் 2.30 மணி இருக்கும் என்று சொன்னால் அது சரிதான். அந்த சமயத்தில் நான் லோடு மேன் சங்கத்தில் இருந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் இறந்த தகவல் எனக்கு கிடைக்கப்பெற்றபோது நான் எங்கு இருந்தேன் என்று கேட்டால் அனுப்பானடி ஹவுசிங் போர்டில் இருந்தேன்.

இந்த வழக்கு சம்பந்தமான தகவல் எனது அம்மா சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் பிரேதத்தை கார்ப்பரேசன் காம்ப்ளக்ஸ் வெளிக்கடையில் உள்ள ஸ்டீபன் காம்பளக்ஸ் முன் பார்த்தேன் என்று சொன்னால் அது

சரிதான். நான் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் பார்க்கவில்லை. நான் சொன்னதுபோல் காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றும், போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிகொண்டார்கள் என்றும் சொன்னால் அது சரியல்ல. 5 வது எதிரி சபாரத்தினத்திற்கும் எனது தகப்பனாருக்கும் முன் விரோதம் இல்லை என்று சொன்னால் முன் விரோதம் இல்லை. 4 வது எதிரி நெல்சன் என்பவருக்கும் எனக்கும் உறவுமுறை விரோதம் உள்ளது என்றும், அதனால் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை எனக்கு போலீசார் சொல்லிக்கொடுத்தார்கள் என்றும், அதனால் நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

**நீதிமன்ற கேள்வி**

இன்று சாட்சியம் அளிக்க உங்களை யாரும் மிரட்டினார்களா ?

**பதில்** - யாரும் மிரட்டவில்லை.

**நீதிமன்ற கேள்வி** - 13.02.2025 ம் தேதி நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை அவ்வாறு சொல்லும்படி யாரும் உங்களை மிரட்டினார்களா?

**பதில்** - யாரும் மிரட்டவில்லை.

2 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

5 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

9 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. அரசு தரப்பில் இளம் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு மறுவிசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- தங்கராஜ்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.